மாதர் மனோரஞ்சினி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.

VOL. 2.	MADRAS: FEBRUARY 1901.	No. 12.
புத்த. ௨.	சென்னப்பட்டணம் 1901௵ பிப்பரவரி௴	இல. ௧௨.

காலஞ்சென்ற ஜட்ஜி ரானாதே.

சென்ற ஜனவரிமாதம் 16-ந் தேதி புதன்கிழமை இராத்திரி நமது இரத்தினத்திற் சிறந்ததொன்றை இழந்தோம். இந்தியாவின் சிரேஷ்ட புத்திரர்களுக்குள் ஒருவரும் நமக்கெல்லாம் நடுவுநிலைமையின் வழிகாட்டினவரும், பொது நன்மையிலே தன் வாழ்நாட்களைக்கழித்த மாணவ சிரோன்மணி யொருவர் இறந்துவிட்டார். பம்பாய் ஹைகோர்ட்டில் ஜட்ஜியாயிருந்த ரானாதே சுவர்க்க லோகமடைந்தார். இவருடைய பெயர் இந்தியாவில் எங்கும் பிரசித்தியடைந்திருக்கிறது. பொது நன்மையில் கவலைகொண்டிருப்போர் யாவரும் அவரை அறியாதவரில்லை. ஆகையால் மாதர் மனோரஞ்சினி படிப்போர்களுக்கு அவரைக்குறித்து இவ்விஷயத்தில் சுருக்கமாய் எழுதுவோம்.

மகாதேவ கோவிந்த ரானாதே சிறந்த வம்சத்தைச் சேர்ந்தவர். அவருடைய பெரிய பாட்டனார் பேஷ்வாக்களினது துரைத்தனத்தில் சிறந்த அதிகாரம் வகித்திருந்தார். அவரது பாட்டனார் புனாவில் மாமலத்தார் உத்தியோகத்திலிருந்தார். அவருடைய தகப்பனார் கோலாபூர் சமஸ்தானத்தில் மேன்மைபெற்ற வேலையிலிருந்து பிறகு பென்ஷன் பெற்றுக்கொண்டிருந்தார். ரானாதேயின் கூடப்பிறந்தவர்கள் நால்வர். இவர் 1842-ம் வருஷத்தில் பிறந்தார். ஆகையால் அவர் மரித்த காலத்தில் அவருக்கு வயது 59. இவர் 14 வயது வரையில் கோலாபூர் சமஸ்தானத்திலேயே கல்வி கற்றுக்கொண்டிருந்தார். அதன் பிறகு பம்பாய் நகரத்தில் எல்பின்ஸ்டன் காலேஜைச் சேர்ந்தார். இவர் படித்த காலத்தில் பம்பாய் சர்வகலாசாலை யேற்படுத்தப்படவில்லை. ஆனால் அது ஏற்பட்ட பிறகு பரீக்ஷைகளுக்கெல்லாம் சென்றார். மெடிரிகுலேஷன் முதல் எம். ஏ. எல். எல். பீ வரையில் பரீக்ஷை ஒவ்வொன்றிலும் முதல் மாணாக்கராயிருந்து பரிசுகளும், மெடல்களும் பெற்றார். பம்பாயில் இவருக்கு "கல்வியரசு" என்று பெயர் இவ

கடைசிகாலம் வரையிலும் அதி கஷ்டமான சர்க்கார் உத்தியோகங்களை வகித்து, வேலைநடத்திக் கொண்டிருந்தபோதிலும், தனது கல்விப் பயிற்சியை விடாது நடத்திக்கொண்டுவந்தார். ஆகையால் கல்வியரசு என்னும் பெயர் இவருக்கு நன்ருய் ஏற்றது. எம். ஏ, பரீக்ஷையில் தேர்ந்த பிறகு தான் படித்த காலேஜாகிய எல்பின்ஸ்டன் காலேஜில் இங்கிலீஷ் பாஷையில் பண்டிதர் வேலைக்கு நியமிக்கப்பட்டார். இவ்வேலையிலிருக்குங் காலத்தில் நடு நடுவில் மாஜிஸ்டிரேட்டாகவும், ஜட்ஜாகவும் சென்றிருக்கிருர். இவருக்கு இங்கிலீஷ் பாஷையிலுள்ள பாண்டித்தியம் இவ்வளவு அவ்வளவல்ல. இவர் காலேஜில் அந்தப் பாஷையில்செய்த பிரசங்கங்களைக்கேட்க அநேகம் ஐரோப்பியர்கள்கூட வந்திருந்தார்கள். இவருக்கு உபாத்தியாயரும் பிறகு பம்பாய் வித்தையிலாகாவுக்கு முக்கிய அதிகாரியாயுமிருந்த (Sir Alexander Grant) ஸர் அலெக்ஸாண்டர்கிராண்டு என்பவர் தான் சீமைக்குப்போகும் காலத்தில் இவரை, அற்புதமான புத்தி கூர்மையும் விசாலமான அறிவுடையவரென்று சொல்லியிருக்கிருர். இவரை ஏகசந்தகிராகி யென்பார்கள். ஒரு புஸ்தகத்தை யொருதடவை படித்தால் அதனது முக்கிய விஷயங்களைக் கவர்ந்து கொள்ளுவாராம்.

எழுபதாம் வருஷங்களில் இவர் சப் ஜட்ஜியாகவிருந்தார். பிறகு கொஞ்சகாலம் ஜில்லா கோர்ட்டு ஜட்ஜியாகவிருந்தார். 1884-ம் வருஷத்தில் புனவில் ஸ்மால் காஸ்கோர்ட் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டார்; பிறகு 1893-ம் வருஷத்தில் டேலாங் இறந்துபோக ஃவ ஹைகோர்ட்டு ஜட்ஜிவேலைக்கு நியமிக்கப்பட்டு, இறக்கும் வரையில் அந்த வேலையிலேயே இருந்தார்.

நமது தேசத்தில் இன்னும் அநேக இந்தியர்கள் இவரைப்போல உன்னத பதவியை யடைந்திருக்கையில், இவர்மாத்திரம் இவ்வளவு புகழும் கீர்த்தியுமடைவதற்கு என்னகாரணம் என்று இங்கேசற்று யோசிப்போம் உலகத்தில் மாந்தர் கீர்த்தியடைவதற்கு முக்கிய காரணங்கள் இரண்டுண்டு. அவையாவன: மனோ சாமர்த்தியமும் நற்குணுதிசயங்களுமாம். சிலர் கல்வி நூல்களில் பாண்டித்தியத்தினுலும், கல்விச்சிறப்பினுலும் புகழடைகிருர்கள். அநேகர் தேசத்து சட்டங்களில் நல்ல ஆராய்ச்சியுள்ளவராய் விசாரித்த அறிவினுலும் நுண்ணிய புத்தியினுலும் கீர்த்தி பெறுகிருர்கள். இன்னும் அநேகர் துரைத்தனமுறைமை நன்ருயறிந்து தமக்கு கீழ்ப்பட்டிருக்கும் ஜனங்களது கஷ்டத்தைப்போக்கி அவர்களது சௌக்கியத்தை விர்த்திசெய்து நல்ல அதிகாரிகள் என்று பெயர் பெறுகிருர்கள். வேறு சிலர் கடவுள் தங்களுக்குக் கொடுத்திருக்கும் மனோ வல்லமையைத் தங்கள் சொந்த ஆக்கத்தையும் சுய நலத்தையும் பேணும் கருவியாய் எண்ணுமல், தங்களது தேசத்தின் பெருமையையும் கீர்த்தியையுமே மேம்பட்டபொரு

ளாய்க்கருதி அதற்காக தங்கள் மனோவல்லமையைத் தத்தம்செய்து தங்கள் காலத்திலில்லாவிடினும் பிற்காலத்திலாவது புகழடைகிறார்கள். ஆனால் இப்போது நாம் சொல்லும் ரானடே யென்பவருடைய கீர்த்திக்கோ மேற்சொன்ன காரணங்கள் எல்லாம் பொருந்தியிருந்தன. இளமைப்பருவத்தில் பரீக்ஷைகளெல்லாவற்றிலும் முதலில் தேறி பிறகு துரைத்தன முறையில் இந்தியர்கள் இப்போது அடையக்கூடிய உன்னத பதவியாகிய ஹைகோர்ட் ஜட்ஜாகவிருந்ததே அவருடைய மனோ சாமர்ததியத்துக்கு தகுந்த சாக்ஷியாகும். அந்த வேலையை யவர் எவ்வளவு திறமையுடன் நடத்திவந்தார் என்பதைக்குறித்து அநேகர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர் துரைத்தன காரியத்தைச் செம்மையாய் நடத்துவதோடு நிற்கவில்லை. பொது நன்மைக்காக நமது தேசத்திலுண்டாயிருக்கும் ஒவ்வொரு விஷயத்திலும் அவர் மிகக் கவலையெடுத்துக்கொண்டிருந்திருக்கிறார். நாஷனல் காங்கிரஸைச் (National Congress) சேர்ந்து வெளிப்படையாய் அதன் காரியங்களை நடத்த துரைத்தன விதிகள் அவருக்கு இடங்கொடுக்கவில்லை. ஆயினும் அந்தச் சபையை நடத்துவோர்கள் இவரது புத்திமதியை அடிக்கடி தேடிப் பெற்றுக்கொண்டார்கள் என்பது பகிரங்கமான ரகசியமே. நமது கைத்தொழில்கள் நிலைகுலைந்து நமது வர்த்தகம் ஈனஸ்திதி யடைகிறதேயென்ற விசனம் அவர் வாழ்நாள் முழுதும் அவரைப் புண்படுத்திக்கொண்டிருந்தது. இவை இரண்டையும் விர்த்திக்குக் கொண்டுவந்து இந்தியாவை ஐரோப்பிய தேசங்களுக்கு சமமான நிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்ற ஆவல் அவரைக் குடிகொண்டிருந்தது. இவ்விஷயத்தைக்குறித்து அவர் அநேக தட்வைகளில் பேசியும் எழுதியுமிருப்பதுடன்கூட அவ்வெண்ணம் நிறைவேறும்பொருட்டு தனக்கு வேண்டிய தனிகர்களை இவ்விஷயத்திற்காக பொருளுதவியளிக்கச் செய்வித்திருக்கிறார். நமது தேசாசாரங்களும் மதாசாரங்களும் உலகத்தோர் நம்மை நகைக்கத்தக்கபடி சீர்கெட்டு அச்சீர்கேட்டினால் நமது தேசம் கீழ்ப்பட்டிருக்கும் விஷயம் அவர் மனதைக் கவர்ந்துகொண்டிருந்தது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலுள்ளவர் எல்லாருக்கும் வருஷாவருஷம் காங்கிரஸ் சபை கலைந்தவுடன் நடக்கும் ஆசாரச் சீர்திருத்த சபைக்கு ரானடே தான் ஊன்றுகோல் என்புது செவ்வையாய்த் தெரியும்; அநேகருக்கு இவரை இச்சபையின் மூலமாய்த்தான் தெரியும். இவருக்குப் பிறகு அச்சபை என்ன நிலையடையப்போகிறதோ வென்று எல்லாரும் பயந்துகொண்டிருக்கிறார்கள். மதவிஷயத்தில் தொன்று தொட்டுள்ள வேதங்களையும் உபநிஷத்துகளையுமே மோக்ஷ சாதகங்களாய்க் கைக்கொள்ள வேண்டுமே யொழிய பிற்காலத்திலுண்டான புராணங்களும் பாஷியங்களும்

உண்மையை விளக்கப்பட்டவைகளல்ல வென்பது அவர் கொள்கை. அக் கோட்பாட்டைக் கைக்கொண்டு சமய சீர்த்திருத்தத்துக்காக அதிக முயற்சி யெடுத்துக்கொண்டு பம்பாயில் "பிரார்த்தன சமாஜ்" என்னும் நூதன மதவழியை ஏற்பாடுசெய்து அதை முன்னுக்குக் கொண்டுவந்தவர்களுள் அவர் ஒருவர். இப்படி நமது தேசத்து நன்மைக்காக ஒவ்வொரு மார்க் கத்திலும் ஊக்கத்துடனும் திறமையுடனும் முயன்றுகொண்டிருந்த இரத் தினத்தை யிழந்துவிட்டோம். அவரிருந்த இடத்தையடைந்து அந்த வேலையை விடாது நடத்துவோர் இக்காலத்தில் யாரையுங்காணோம். அவ ருடைய மரணம் நம்மொவ்வொருவருக்கும் விசனத்தை யுண்டாக்கத்தக்க தென்று சொல்லவும் வேண்டுமோ!

இந்துமாதர்களின் விக்டோரியா ஞாபகக் குறிப்பு.

டப்ரின் பெருமாட்டியின் தர்மநிதி.

கர்ஸன் பிராட்டியின் வேண்டுகோள்.

இந்துப்பெண்களுக் கத்தியாவசியமான மருத்துவப் பெண்களுக்கு வேண்டிய திரவிய உதவி செய்கிற மகாஜன சங்கம் ஒன்றிருக்கிறது. அச் சங்கத்தின் நோக்கத்தைச் செவ்வையாக நிறைவேற்றும்பொருட்டு நம் இராஜப்பிரதிநிதியின் மனையாட்டியாகிய லேடி கர்ஸன் பின் வருமாறு இந்திய ஜனங்களுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார் :—

இச்சங்கத்தை முதலில் ஸ்தாபித்தவர் மரித்தது, மத்திய காரிய நிர்வா கச் சபையாருக்கு (Central Committee) மிகுந்த விசனத்தை உண்டாக் கிற்று. நம் மகாராணி அவர்களின் மரணமாகிய துக்க சம்பவத்தால், இவ்வருஷம் கல்கத்தாவில் வருஷாந்தரச் சபை கூடவில்லை. சபை கூடா மையால் பொது ஜனங்களின் உதவியை நேரில் கோருவதற்குச் சந்தர்ப் பம் வாய்க்காமல் போயிற்று. ஆகையால் பத்திரிகைகளின் வாயிலாய் இங்கு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேற்கண்ட பொது நிதியில் நம் மகாராணியவர்கள் எவ்வளவு சிரத் தைக் கொண்டிருந்தார் என்பது அநேகருக்குத் தெரிந்திராது. இச்சங் கம் இவ்வளவுநாள் நிலைத்திருந்ததற்கு நம் மகாராணிதான் காரணம். இந் தியாவிலுள்ள சர்வ கலாசாலைகளிலும் வைத்திய சாலைகளிலும் பரிக்ஷை களில் முதலாய்த் தேறும் மாதர்களுக்கு, தங்கத்தினும் வெள்ளியின லும் செய்யப்பட்ட பரிசுகளைக் கொடுத்துவந்தனர். மேலும் இச்சங்கத் தின் நோக்கங்களைப்பற்றியும் இவர் பேசியிருக்கிறார். அந்தப்புரத்துக்குச்

(Zenana) சென்று வைத்தியம் செய்யத்தக்க மருத்துவப் பெண்கள் இத்தேசத்துக்கு அத்தியாவசியமென்று நம் மகாராணியாருக்குத் தோன்றினபடியால் அவ்விஷயத்தில் அவர் மிகவும் சிரத்தையெடுத்துக்கொண்டார். தற்காலம் டப்ரின் நிதிக்கு திரவியம் போதாமலிருந்தது. இப்படியிருக்க 18-மாதங்களுக்கு முன்பு. நம் இராணியார் இந்நிதி பெருகிவர வேண்டிய சாதகங்களைத் தாம் செய்து கொடுப்பதாகத் தந்திச்சமாசாரம் அனுப்பி வைத்தனர்.

இத்தேசத்துப் பெண்களி லநேகருக்குத் தங்கள் வீடுகளை விட்டு வெளியே செல்லும் வழக்கமில்லையென்று நம் மகாராணியார் செவ்வையாக அறிந்து, வைத்தியம் பயின்ற மாதர்கள் வெளி தேசங்களிலும் போய்ப் பயில்வதற்கு வேண்டிய சாதகங்களைச் செய்ய மிக்க ஆவல்கொண்டிருந்தனர்.

நாமிப்பொழுது பொதுதர்ம நிதியொன்று ஏற்படுத்தி அதினின்றும் வரத்தகுந்த வட்டித்தொகையைச் "சக்கிரவர்த்தினி அல்லது விக்டோரியா உபகாரச் சம்பளம்" என்று பெயரிட்டு ஆங்காங்குள்ள தரும வைத்திய சாலைகளிலும், வித்தியா சாலைகளிலும் மருத்துவம் கற்றுக் கொள்ளுகிற பெண்களுக்குக் கொடுக்கவேணுமென்று விரும்புகிறேன். இம்மாதிரியான தர்மச் சம்பளங்களை ஸ்தாபிப்பதில் அநேகர் உதவி செய்வார்களென்றும், மகாராணி அவர்கள் மனப்பூர்வமான கருத்தை நிறைவேற்றும்பொருட்டு யாவரும் முன் வருவார்களென்றும், அதினால் இந்தியாவிலுள்ள மாதர்களுக்குக் கஷ்டம் நீங்கி நல்லகாலம் பிறக்குமென்றும், நான் உறுதியாக சொல்லமாட்டுவேன். இத்தேசத்தில் தங்கள் அத்தியந்த வாஞ்சைக்குப் பாத்திரமான சக்கிரவர்த்தினியார் மரித்ததற்காக அநேக விதமாய்ப் பொது ஜனங்கள் தம் விசனத்தை வெளியிடுவதால் இம்மனுவை அவர்கள் முன்பாகவைத்தால், அவர்கள் அநுதபித்து இவ்விஷயத்தில் சிரத்தை யெடுத்துக்கொள்வார்களென்று நம்புகிறேன். மேற்சொன்ன விஷயத்துக்காக அநேகம் கையொப்பக்காரர்களைச் சேர்ப்பித்து உதவி செய்யத்தக்க நல்ல பதவியில் சுதேச ஸ்திரீகள் பலரிருப்பார்கள்.

எல்லா நன்கொடைகளையும் என் பேருக்கனுப்பிவித்தால் பெற்றுக் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன். மேலும் எல்லா ஜில்லாக்களிலும், நகரங்களிலும் உதவிசெய்கிற ஐரோப்பியருக்கும், இந்தியருக்கும் யான்நன்றியுள்ளவளாயிருப்பேன்.

1901ஆ பிப்ரவரிமீ 11-ந்தேதி
கல்கத்தா.

மேரி கர்ஸன்.

காஞ்சீபுரம் பெண்பாடசாலையில் நமது கவர்னர் பேசியது.

நமது கவர்னரவர்கள் காஞ்சிபுரத்தில் ஸ்தாபித்துள்ள ஆர்க்காடு நாராயணசுவாமி முதலியாரின் பெண் பாடசாலைக்கு இம்மாதம் 25-ந் தேதி சென்று அப்பாடசாலையைத் திறந்தார்கள். அக்காலத்தில் நமது கவர்னரவர்கள் பெண் கல்வியைக்குறித்து பின்வருமாறு பேசினர்.

"இப்பாடசாலையைத் திறக்கநேர்ந்தது மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்றும், பொதுநன்மைப் பிரியமும் தாராள சிந்தையுமுள்ள ஆர்க்காடு நாராயணசுவாமி முதலியார் வெகு நல்லெண்ணங்கொண்டு இப் பாடசாலையை ஸ்தாபித்தாராதலின் தாம் இத்திறப்பு மகோற்சவத்தில் கலந்து அவரைக் கனப்படுத்த நேர்ந்தது தமக்கு மனக்கிளர்ச்சியைத் தருகின்றதென்றும், பெண்பாலர்கள் கல்வி பயில்வதவசியமென்றும், சிறு குழந்தைகளை நல்வழிப் படுத்துவது தாயைப் பொறுத்த தாதலினாலும் கணவனுக்கு வணங்கி நடக்கப் பெண்கள் நன்கறியக் கல்வி இன்றியமையாத சாதனமாதலினாலும், இந்தியாவுக்குப் பெண்கல்வி சிறந்ததென்றும், ஆகையால் ஆர்க்காடு நாராயணசுவாமி முதலியார் பங்களூரிலும் இப்போது காஞ்சிபுரத்திலும் பெண்பாடசாலைகள் கட்டித் தம்பணத்தை நல்வழியில் செலவழிப்பது மிகவும் சிலாகிக்கத் தகுந்ததென்றும், அவர் இவ்விதமாகச் செய்கிற நன்மைகளுக்கு எல்லோரும் கடமைப்பட்டவர்களென்றும், பெண்கல்வியென்று தாம் கூறுவதினாலேயே ஆங்கிலேயப் பெண்கள் மாதிரி இந்தியப்பெண்கள் கற்கவேண்டுமென்பது தம்முடைய அபிப்பிராயமல்லவென்றும், மேல் நாட்டுக் கல்வி முறைகளையும் கீழ்நாட்டுக் கல்வி முறைகளையும் தற்காலத்துக்குத் தகுந்தபடிக் கலந்து பொருத்தமான ஏற்பாடுகள் செய்வதே உசிதமென்றும், அத்தகைய பொருத்தமான ஏற்பாடுகளுடன் ஸ்தாபிக்கப்படுகிற கலாசாலை இந்தப்பழம் பதியாகிய காஞ்சிபுரத்திலே ஸ்தாபிக்கப்படுவதுதான் சிறந்ததென்றும் கவர்னரவர்கள் கேட்போர் மனம் ஆனந்திக்க இன்மொழியுடன் புகன்றார்கள்."

Notes and News.

ஆண் அரசர்களெல்லாம் மதித்துக் களிக்குமாறு கிரீடம் தரித்த பெண்ணரசியாகிய விக்டோரியா மகாராணியின் ஞாபகமாக பெண்பாலார் ஒவ்வொருவரும் ஞாபகச்சின்னம் ஏற்படுத்த பம்பாயிலுள்ள மாதர்கள் ஒரு கூட்டங்கூடி இக்காரியத்தை நிறைவேற்ற ஒவ்வொருவரும் பத்து ரூபாய் கொடுத்தால் போதுமென்று தீர்மானித்தார்களாம். இவ்விதம் பம்பாயிலுள்ள மாதர்கள் செய்தமாதிரி சென்னையிலுள்ள மாதர்களும் செய்வார்களென நம்புகிறோம்.

இச் சென்னையின்கண் புகழ்பெற்று ஓங்கும் ராஜாராமசுவாமி முதலியாரவர்கள் மகாராணியாரின் ஞாபகார்த்தமாக ஒரு பெண்பாடசாலையை சென்னையில் ஸ்தாபிக்க உத்தேசித் திருக்கிறதைக்கேட்க மிக சந்தோஷப் படுகிறோம். இதற்கு லக்ஷம் ரூபாய் செலவிட தீர்மானித்திருக்கிறாராம், ஈசனிவருக்கு தீர்க்காயுளளிப்பாராக.

காலஞ்சென்ற நம்மது மகாராணியாருக்குப் பிறந்த பிள்ளைகள் ஒன்பது பேரில் இப்போதுள்ளவர் 6-பேர்; பிறந்த பேரப்பிள்ளைகள் 40-பேரில் இப்போதுள்ளவர் 31-பேர்; பிறந்த கொள்பேரப்பிள்ளைகள் 37-பேருமிருக்கிறார்கள்; இவர்களுள் ஆண் 22, பெண் 15; இவர்களில் 6-பேர் முன்னிளவரசரும் இப்போது மகாராஜாவுமான ஆல்பர்ட் எட்வர்ட் சக்கிரவர்த்தியின் பேரப்பிள்ளைகள்; 18-பேர் இப்போது ஜர்மனிச் சக்கிரவர்த்தினியின் தாயாராகிய பிரிடரிக் சக்கிரவர்த்தினியாரின் பேரப்பிள்ளைகள்; 11 பேர் காலஞ்சென்ற ஆலிஸ் இளவரசியின் பேரப்பிள்ளைகள்; 6 பேர் காலஞ்சென்ற ஸாக்ஸ் கோபர்க் பட்டவர்த்தனரின் பேரப்பிள்ளைகளாம். "பண்ணிய பயிரிற் புண்ணியந்தெரியு" மென்றபடி நம் பெருமாட்டியின் நற்குண நற்செய்கைகளுக் கேற்க சந்ததி தழைத்தோங்கியது.

விந்தை.—சீயம் தேசத்தில் வருடங்களுக்கும், மாதங்களுக்கும், யானை, சிங்கம், கோழி, எலி, பூனை, எனப் பெயர் வைத்திருக்கிறார்கள். யானை வருடத்திற் பிறந்தவன் சிங்கவருடத்திற் பிறந்த பெண்ணை விவாகிக்கக் கூடாதாம். பூனை வருடத்திற் பிறந்த பெண்ணை எலி வருடத்திற் பிறந்தவன் விவாகிக்கக்கூடாதாம். எவ்வளவோ நாகரீக மிக்க இக்காலத்தில் இஃது விந்தையினும் விந்தையன்றோ?

ஓர் மாது எம்-ஏ (M. A.) பரீக்ஷையில் தேறியது:—இதுவரையில் சென்னைச் சருவகலாசாலையில் ஐரோப்பிய இந்தியப் பெண்பிள்ளைகளில் (B. A.) பி-ஏ. பரீக்ஷையில் தேறியவர்கள் எட்டுப் பேரிருந்தாலும், இம் முடிவான பரீக்ஷக்குப் பெண்பிள்ளைகள் முயன்றதில்லை. இப்போது எம். ஏ. என்ற வித்தியாப் பட்டத்தைத் தரிக்கத்தக்கவராகிய மாதுசிரோமணி யாரெனில் பிரெஸிடென்ஸி காலேஜி புரொபசர் சத்யநாதன் அவர்களின் மனைவியார். இம்மாது இப்பரீக்ஷையில் எடுத்துக்கொண்ட விஷயம் இங்கிலீஷ் பாஷா பாண்டித்தியமாம். இது வெகு கஷ்டமானது. இப் பிரயாசையை மேற்கொண்டது எவரும் மெச்சத்தக்கதே யாகும். இம்

மாது தமது சகோதரிகளுக்குத் துணையாகவிருந்து அவர்களுக்கு கல்வியின் பெருமையைப் போதித்து வருவாரென்று நம்புகிறோம்.

சூரியனும் குறைகிறார் :—பூதபௌதிக சாஸ்திரத்திலும் வான சாஸ்திரத்திலும் சமர்த்தரான சர் ராபர்ட்பால் என்பவர் சூரியன் வரவர குறுகி வருகிறதாகவும், ஒருநாளில் 9 - அங்குலம் சுருங்குகிறதென்றும், இதனால் 100-வருஷத்தில் 20 மயில் சுற்றளவு தான் சுருங்கக்கூடுமென்றும், சூரியனுடைய மத்திய அளவு 8-லக்ஷத்து 60-ஆயிரம் மைலாகவிருப்பதால் 40-ஆயிரம் வருஷம் சென்றபிறகும்கூட, 20-ஆயிரம்மைல்தான் சுருங்குமாகையால், இப்பொழுது தோன்றுவதுபோலவே சூரியன் காணப்படுவர் என்றும், லண்டனில் ஓர் பிரசங்கம்செய்தார்.

நமது மகாராணியார் அசௌக்கியமாயிருந்தபோது அவருக்கு சிகிச்சை செய்தவர் நமது கவர்னரின் தாயாராம்.

சென்ற 17-ந் தேதி மேலியாத்தூர் என்னுமிடத்தில், 28 வயதுள்ள கோசாம்மன் என்பவன், பரக்குடவு என்னும் ஆற்றைத்தாண்டிப் போகையில் ஓர்முதலை இவன் காலைப்பிடித்துக் கொண்டு, ஆழத்தில் இழுத்துக்கொண்டுபோய், தனக்கு இரையாக்கிக் கொண்டது.

ஓர் பெரிய குடும்பம் :—இங்கிலாந்து தேசத்தில் 30-வருடங்களாக வாசம்செய்துவந்த மிஸ்டர் லூயிஜேகட்ஸ் என்பவர் 101-வயதிலிறந்தார். இவருக்கு 49-பேரப்பிள்ளைகளும் 29-கொள்ளுபேரன்களும் 14-எள்ளுபேரன்களும் ஆகமொத்தம் 92–பேர்களிருக்கிறார்கள்.

குடிகளுக்கு நன்மை போலும் :—லார்டு ஆம்ப்தில் பிரபு செங்கல்பட்டுச் சுற்றுப் பிரயாணத்தில் குடிகளை நேரில் கண்டு அவர்களின் குறைகளைக் கேட்டு தகுந்த ஏற்பாடு செய்வதாக வாக்களித் திருக்கின்றதைக் கேட்க நமக்கு மிகவும் சந்தோஷத்தை உண்டாக்குகின்றது.

ஓர் புதிய மாகாணம் :—பஞ்சாப்பிற்கும் ஆப்கானிஸ்டான் நாட்டிற்கும் இடையில், ஆப்பிரிடி, வாஸிரி என்னும் சிலமுறட்டு ஜாதியாரின் கிராமங்களனேகம் ஒன்று சேர்த்து, ஓர் புதிய மாகாணமாக்கி “ நியூ பிராண்டியர் பிராவின்ஸ் ” என்று நாமதேயம் கொடுத்து காச்மீர் ரெசிடென்டாகவிருந்த கர்னல் டீன் என்பவரை, ஏஜெண்டாக நியமித்திருக்கிறார்கள். இதுவும் இந்தியாவின் பொக்கிஷத்திற்கு நல்ல வரும்படியே !!

மாயாபுரி விநோதக்கதை.

பின்னொரு நாள் சித்தசுவாமி ஜகதீசனை அருகில் அழைத்து உட்கார வைத்துக்கொண்டு குழந்தாய்! இப்பொழுது உபதேசிக்கத் தகுந்தகாலம் வந்துவிட்டது. ஆதிமத்தியாந்த ரகித நித்திய நிர்மல சச்சிதானந்த சொரூபராகிய ஸ்ரீபரமேசுவரன் ஜீவாத்மாக்களீடேறும் பொருட்டு, அளவில்லாத ஜீவவர்க்கங்களையும், தாதுவர்க்கங்களையும், ஒஷதிவர்க்கங்களையும் சிருஷ்டித்து வைத்திருக்கின்றார். அவைகளில் ஒவ்வொன்றும் அளவில்லாத விசித்திரசக்திகளை யுடையன. அவைகளைக்கொண்டு அநந்தமான அற்புத காரியங்களைச் செய்யலாம். அவற்றின் பலத்தினலேயே அணிமா, மகிமா, கரிமா இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், என்கிற அஷ்டமாசித்திகளையுஞ் செய்கின்றார்கள் பதார்த்தகுணமுணர்ந்த பெரியோர்கள். அணுவுக்கணுவாயிருத்தல் அணிமா; பிருதிதத்துவமுதல் சிவாந்தமீறான எல்லாவற்றிலும் நிறைந்திருக்கும் பெருமையுடையது மகிமாவாம்; மஹாமேருமலை போன்ற சொரூபமுடையவனயிருந்தும் தூக்குவோர்க்குச் சிறு துரும்புபோல இலகுவாயிருப்பது இலகிமா, அணுப்போல் சொரூபமுடையவனயிருந்து மலைபோலுங் கனமுடையவனயிருப்பது கரிமா; ஒரு உலகிலிருந்து மற்றொரு உலகத்துக்குப்போய் மீண்டுவருதல் பிராத்தி யென்னப்பட்ட சித்தியாம். அன்னிய சரீரத்தில், புகுதல் (பரகாயப்பிரவேசஞ் செய்தல்) ஆகாயத்தில் சஞ்சரித்தல், தான் இருக்கும் இடத்தில் இச்சித்த பொருள்களை யெல்லாம் வரவழைத்தல் முதலிய சித்திகள் பிராகாமியமென்னப்படும். தேவர், தானவர், இந்திரன், சந்திரன், சூரியன் முதலிய எல்லாரும் தன் ஏவல்கேட்கும்படி யிருத்தல் ஈசத்துவம்; மிருகங்கள் பட்சிகள் ஊர்வன, அஷ்டதிக்குப் பாலகர், பூதப்பிரேத பசாசகணங்கள் யாவும் தன் வசமாகக்கொள்ளுதல் வசித்துவம் என்ற சித்தியாகும்; அவைகளுக்கு மந்திரங்களும் தந்திரங்களும் உண்டு. இந்தச் சித்திகள் கைகூடி வருவதற்குச் சித்தசுத்தி, நிராசை, ஜீவகாருணியம், குருபக்தி, தெய்வசிந்தனை, பரோபகாரசிந்தை யிருக்கவேண்டும். அசத்தியத்தை ஒழித்துச் சத்தியத்தில் நிலைத்திருக்கவேண்டும். சித்தியடையும் மார்க்கமுணர்ந்திருந்தும் மேற்குறித்த குணங்களில்லாத காரணத்தால் முடிவுபெறுமல் கெட்டோர் பலபேர்.. உனக்கு ஸ்ரீ பரமேசுவரன் கருணை பூரணமாயிருக்கிறபடியால் எளிதில் சித்தியாகும். ஜாக்கிரதையாகவிருந்து காரியசித்திசெய்துகொள்என்று மந்திரதந்திரங்களையும், மூலிகைகளின் விசேஷத்தையும்கிரமமாகவுபதேசித்து, இன்னமிரண்டுமாத மிங்கிருந்து தவமுடித்துக்கொண்டு நீ கருதியதை உத்தேசித்துப் புறப்படலாமென்றார். அதுகேட்ட

ஜகதீசன் மனமகிழ்ந்து சித்தசுவாமிகளுடைய பாதத்தில் ஷாஷ்டங்கமாகப் பணிந்தெழுந்து சுவாமி! ஈனஜந்துக்களாகிய ஓரறிவுயிரினுங் கீழ்ப்பட்ட அடியேனுக்குத் தேவர்களுக்குங் கிடைக்காத மஹா மகிமைகளைப் பிரசாதித்தருளிய ஆண்டவனாகிய உமது திருவடிகளில் எனதுமனம், மொழி, மெய்களை அர்ப்பணஞ்செய்வதைவிட வேறென்ன செய்யப்போகிறேனென்று வணக்கமாய்ச் சொல்லச் சித்தர் அப்பா குழந்தாய்! ஒன்றுக்கும் அஞ்சாதே ஏகசித்தனயிருந்துகொண்டு காரியத்தை முடித்துக்கொள். பிறகு சகலமான தேவர், தானவர்கள், பூதபைசாசர்களும் உனக்கு வசப்பட்டு உன் ஏவலுக்கெதிர் பார்த்திருப்பார்கள். ஒரு குறைவும்வாராது என்று அவனுக்கு உற்சாகமுண்டாகப் பேசி அனுப்பினர். பின் ஜகதீசன் ஏகாக்ரதியான வாளுய்த் தன் தொழிலைச் செய்துகொண்டிருந்தான். இரண்டுமாதங்களுமான பின் சித்தசுவாமி வந்து அப்பா ஜகதீசா! தவத்தை ஒழி; நெடுநாளாகக் கடுமையான தவம்புரிந்து களைத்துப்போயிருக்கிறாய். உன் எண்ணம் நிறைவேறுங்கால மிதுவே. எழுந்திரு என்ற சத்தங்கேடடதும், அவன் தவஞ்செய்வதை நிறுத்திக் கண்விழித்துப் பார்த்துத் தன் குருசுவாமி பாதங்களிற் பணிந்தான். அவர் தமது அருமைத் திருக்கரத்தால் அவனைத் தூக்கியெடுத்துச் சரீரமுழுதுந்தடவிக்களைப் பொழித்து, அப்பா! உனக்கு ஆண்டவன் கருணையால் அஷ்டமஹாசித்திகளும் சித்தித்தன. இனி நீ இஷ்டமான இடத்துக்குப் போகலாம். உனக்கு விருப்பமுண்டானபோது நினைத்தால் நான் வந்து பிரத்தியட்சமாவேன். நீ போய் ஆகவேண்டியகாரியங்களை முடித்துக்கொள் என்று அருள்செய்ததும் ஜகதீசன் அவரைப்பணிந்து துதித்துச் செலவுபெற்றுக்கொண்டு, அவ்விடம்விட்டுப் புறப்பட்டு வெளிப்பட்டுத், தன் மனம்போனவாறே நெடுந்தூரம் போனன். அப்படிப்போகும் வழியில் அழகாகத்தெளிந்து ஓடிக்கொண்டிருக்கும் வற்றாத ஓர் நதியையும் அதற்குச் சற்று தூரத்தில் வானளவும் உயர்ந்து பலவகையான ஒஷதிகளுக்கு இடமாய்ச், சதாமேகங்கள் தவழ்ந்துகொண்டிருப்பதாய்த் தேவ, தானவ, கின்னர், கிம்புருஷ, உரகர் முதலானவர்களுக்குவாசஸ்தானமாய்ச், சகலகாரியசித்திக்குச் சாதகமாய் விளங்கிய ஓர் பெரிய பருவதத்தையுங் கண்டு இவ்விடம் மஹா அற்புதமாய் விளங்குகிறது ஆதலால் இங்கே நமது இராஜதானியை ஸ்தாபித்து இங்கிருந்து பூலோகமுழுவதையும் ஏகசக்கிராதிபதியாய் அரசாளவேண்டுமென்று கருதி அந்நதிக்கருகில் வந்தான். அவ்விடத்தில் இருபது வயதுசென்ற ஒரு பிராமணப்பிள்ளை யாண்டான் தன் கண்களில் நீர் சோர அழுதுகொண்டு நிற்பதைக் கண்டு, அவனைக்கிட்டி, ஐயா! நீர் எவ்விடமிருப்பது? உமது பேரென்ன? ஜனசஞ்சாரமில்லாத இவ்விடத்திலிருந்து அழுவானேன்? எனக்கறிவிக்கவேண்டுமென அவன்

நீ அஞ்சவேண்டாம் ; உன் துக்கத்தை ஒழி. மகிழ்ச்சியடை எனக்கூறி பெதிரில்வந்து நின்றவுடனே பாலாம்பாள் தன்னையறியாமல் நித்திரையுண்டாக மயங்கி அயர்ந்து தூங்கிவிட்டாள். மங்களாம்பாள் தன் கண்களைத்திறந்து பார்த்து, அளவுக்கடங்காத மகிழ்ச்சிகொண்டு உடனே எழுந்திருந்து கணவன் பாதத்தில்வணங்க முயன்றும் சரீரத்தில் சக்தியிலலாதுவருந்துவது கண்ட ஜகதீசன் அவளருகில்சென்று அவள் சரீரத்தைத் தன்கைகளால் தடவிக்கொடுத்து, இருகையாலும் அவளைத்தூக்கித தன் மடிமீதுவைத்துக்கொண்டு முத்தமிட்டு, என செல்வமே! இதுகாறும் மெத்த வருத்தப்பட்டு இளைத்துப்போயிருக்கிறாய் ; இவ்வித கஷ்டத்துக்கு நான் அல்லவோ! காரணமாயிருந்தேன் ? எனவேலை நிறைவேற இத்தனைநாட்களாயின ? இல்லாவிட்டால் தாமதித்திருப்பேனோ ? உனக்குச் சொன்னவாக்குத் தவறுவேனோ ? இனி யுனக்குச்சுகமேதவிர துக்கமெனபதேயில்லை. என்று இனிய வசனங்கள்கூற, மங்களாம்பாள் பிராணநாதா ! எனக்குத் துக்கமாவது எது ? சுகமாவது எது ? சதா உமது திருவடி தரிசனமசெய்து கொண்டு பிரியாமலிருப்பதே சுகம் ; அதுவே சொர்க்கவாழ்வு. பிரிந்திருப்பதே துக்கமும் நரக துன்பமுமாம். இனி அரைக்ஷணமகூடத் தனித்திருக்கமாட்டேன். கூடவே வருவேனெனப், பெண்ணே ! அதென்ன ? அப்படிச் சொல்லுகிறாய் ? உன்னைத் தனியாகவிட்டுப் போகவோ இவ்விரவில் உன்னைத்தேடிவந்தேன் ? இல்லைஇல்லை ; உன்னையழைத்துக்கொண்டு போகத்தான் வந்தேன். நீயும் கூடவே வாவென்று சொல்லிக்கொண்டிருக்கையில், செவ்வொளி, கருவொளி, பொனனொளி, மின்னொளி, வெயிலொளி, நிலவொளி கலந்துபரவி நிற்றலா லித்தன்மையதென்று காண்பதற்கரிதாய்ப் பற்பல அற்புத நிறைந்த பொற்புடைய உபபரிகையில தன கணவனோடுதான் வீற்றிருக்கக்கண்ட மங்களாம்பாள் அச்சமும் ஆச்சரியமும் அடைந்து கனவு நனவு என்கிற வேறுபாடுகாணாமல் மயங்கிச் சுவாம் ! இதென்னமாயம் ? நான் மிகுதியும் அஞ்சுகிறேன. அச்சம் நீக்கிக்காத்தருளும் என்று வேண்ட என் கண்ணே ! நீ ஒன்றுக்கும் அஞ்சாதே ! உன்னுடைய கற்புடமைக்கு ஸ்ரீ பரமேசுவரன் உனக்குக்கடாட்சித்தருளிய திரு அரண்மனையாகும். இதில்தான் நீ வசித்திருக்கவேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கையில் காலிலணிந்த பாதகுறடும, கையிற்பிடித்த பொற்பிரம்பும், காவிகாம்பிரவுடையும், திருநீரணிந்து நிலவொளி வீசுந்திருமேனியழகும், சிறுநகைதோன்று மதிமுக எழிலுந்தோன்ற வந்துநின்ற சித்த சுவாமியைக்கண்டு ஜகதீசன் தன் மனைவியோடு திடீரென்றெழுந்திருந்து, தன் மனைவியோடு சென்று அவர் பாதத்தில் வணங்கி ஆசீர்வசனம் பெற்று, அழைத்துக்கொண்டுவந்து ஒரு இரத்தின பீடத்திலெழுந்தருளச்

செய்து, ஷோடசோபசாரங்களாலுபசரித்துப் பூசித்துப் பெண்ணே! நம்தெய்வம் எழுந்தருளியது. நீ பணிந்துகொள்ளென்று கூறித்தாலும் பணிந்து கைகட்டி வாய்புதைத்துநின்று சுவாமீ! மேல்நடக்கவேண்டிய காரியங்களைக் கட்டளையிட்டருளவேண்டுமென, அவர் கருணையோடு அப்பா குழந்தாய்! நாளையதினமே நல்ல சுபதினமாகையால் மங்களாம்பாளை விவாகஞ் செய்துகொண்டு உலகமுழுதும் உன்வசமாக்கிக்கொண்டு நீதி முறைதவறாமல் அரசுபுரிந்திரு. வேறொரு இரகசியம் இருக்கிறது. அதென்னவென்றால் கருநாடகத்து அரசன் பிரபாகரன் என்பவன் புத்திரனில்லாமல் தவம்புரிந்து நமது கருணையால் இலட்சுமியும் நாணும் திருவெழில் மிகுந்த ஒரு பெண்குழந்தையைப்பெற்று வளர்த்துவருகையில் அப்பெண் மங்கைப்பருவம் அடைந்ததுகண்ட சகல இராஜகுமாரர்களும் மணம்பேச வந்தார்கள். அவர்களுள் சக்கிரவர்த்தி புத்திரனும் ஒருவன். சக்கிரவர்த்தியோ நாஸ்திகன். அவன் தனக்கேதரவேண்டுமென்று கட்டாயம் செய்தபடியால் பிரபாகரன் வேறுவழியில்லாமல் அவனுக்கே கொடுக்கத்தீர்மானித்தான். நாஸ்திகனை மணஞ்செய்துகொள்ள தனக்கு மனமில்லையென்று அந்தப்பெண் நிச்சயமாகச் சொல்லிவிட்டபடியால் பிதா சக்கிரவர்த்திக்குப் பயந்து அந்தப்பெண் பைத்தியம்பிடித்தவளென்று தீர்மானித்துக் கொடுஞ் சிறையில்வைத்திருக்கிறான். ஆகையால் நீ நமது ஆணையின்படி அந்தப் பெண்ணையும் மணம்புரிந்து சுகமாகவாழ்ந்திருவென்று கூறியருளி மறைந்துபோனார். பிறகு மங்களாம்பாள் சுவாமீ! நமது சுவாமியின் கட்டளைப்படிசெய்வது எனக்கு மிகச் சந்தோஷம். சீக்கிரம் அப்படியே அந்தப்பெண்ணையும் மணம்புரிந்து இங்கே கொண்டுவரவேண்டுமென்று களங்கமற்ற உள்ளத்தோடு மகிழ்ந்துகூறினள். பின்பு சுவாமீ! என்தோழி பாலாம்பாளிடத்தில் ஒரு வார்த்தைகூட பேசாமல் வந்துவிட்டேனே! அவள் என்ன ஆனளோ தெரியவில்லை என்று சொல்ல, அவன் பெண்ணே! அதோ! பாரென்றுகாட்டி, அவ்விடத்தில் தன்தோழி நித்திரை செய்யக்கண்டு மனமகிழ்ந்து அவளருகில்போய்த் தட்டியெழுப்பிக்கொண்டு வந்து நடந்தவற்றைக்கூறி மகிழ்ந்து, இராமுழுவதும் அரண்மனையின் விநோதங்களைச் சுற்றிச்சுற்றிப் பார்த்துக் களித்திருந்தார்கள். விடிந்தவுடனே மந்திரி கங்காதரன் வந்துவணங்க ஜகதீசன் அவனைநோக்கி இன்று நல்ல சுபதினமாகையால் என் விவாகம்நிறைவேறவேண்டும்; சீக்கிரம் அதற்குத் தயார்செய்யென்றுகூற அவன் மகிழ்ந்துபோய் நகரத்தாருக்குப் பறைசாற்றித்தெரிவித்துச் சகலமுந் தயார்செய்து முடிக்கக்குறித்த முகூர்த்தத்தில் விவாகம்நிறைவேறியது. விவாககிரியை நாலுநாளும்முடி-

ந்தபின் நகரத்தார் யாவரும்வணங்கித் துதிக்க மங்களாம்பாளோடுதன் னரசுசெலுத்திக்கொண்டு இருவரும் வாழ்ந்திருந்தார்கள். நாகராஜன் என்கிற ஒரு மந்திரி பாலாம்பாளை மணம்புரிந்துகொண்டான். சில நாட்களானபின் மங்களாம்பாள் ஜகதீசனை நோக்கிப் பிராணநாதா! கருநாடக தேசம்போகவேண்டாமோ? எனப், பெண்ணே! நான் நாளையதினம் போய்வருவேனென்றுகூறி அவளைச் சந்தோஷிப்பித்தான்.

[இன்னும் வரும்.] தேவதுஞ்சரியம்மாள்

கனம் மிஸ்டா ஜஸ்டிஸ் ஷெப்பர்ட் பெண்கல்விவிஷயமாக பேசியது.

இந்தியாவில் கல்கட்டா, அலஹாபாத்து, லாஹோர், பம்பாய்முதலிய விடங்களில் சர்வகலாசாலைச் சங்கங்களிருக்கின்றன. இவ்விதமே சென்னைக்கும் ஒருசங்கம் 1854-ம் வருஷம்முதல் ஏற்படுத்தப்பட்டு நடந்துவருகிறது. இச்சங்கத்தார் பல பரீக்ஷைகளிற்றேறியவர்களுக்கு வருஷத்திற்கொருதடவை சபைகூட்டி கௌரதப்பட்டங்களும், வெகுமதிகளும் கொடுப்பது வழக்கம். இவ்விதப் பட்டங்களளிக்க மார்ச்சுமீ 29-ந் தேதி சாயங்காலம் சேப்பாக்கத்திலுள்ள விசித்தரமான "ஸெனட் அவுஸ்" என்ற மண்டபத்தில் இச்சங்கத்தார் சபைகூடிற்று, அப்பொழுது நமது கவர்னரவர்கள் சபா நாயகராகவீற்றிருந்தார். உப அத்தியக்ஷதலைவராயிருந்த மிஸ்டர் ஷெப்பர்ட் பெண்கல்வியைக் குறித்து பின்வருமாறு சொன்னார்:—

"மிஸ்ஸஸ் சத்தியநாதன் எம்.ஏ., பரீக்ஷைதேறினது இந்தியரனைவருக்கும் சந்தோஷந் தரத்தக்கது. இவரைப்போல் அநேக இந்திய ஸ்திரீகள் உயர்தரக் கல்விகற்பது அவசியம்; ஆனால் உயர்தரக் கல்விகற்ற இந்திய புருஷர்கள் தங்கள் பெண்களுக்கும் உயர்தரக் கல்விகற்பிப்பதில் அக்கரைபாராட்டுகிறதில்லை, சர்வகலாசாலைச் சங்கத்தாரால் வித்தியாப் பட்டங்கள்பெற்ற வித்தியார்த்திகள், அவர்கள் மனதிற்பட்ட உண்மைகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் சரியாக உள்ளும்புறமும் ஒத்துநடந்துகொள்ள முடியாமல், வெளியிலொருவிதமாகவும் ஸ்திரீகளுக்கும் முதியோர்களுக்கும் பயந்து வீட்டில் வேறுவிதமாகவும் நடந்து சீவிக்கிறார்கள். இவ்விதம் இவர்கள் செய்துவருவதால் ஜனங்களுக்கு உண்மையான ஞான ஒளியானது பரவுவதுகஷ்டம். பெண்களுக்கு கல்வி அவசியமென யாவரும் ஒத்துக்கொண்டவிஷயம். தாழ்ந்த படிப்பில் பெண்கள் அதிகரித்து வருகிறதானது ஜனங்களின் ஊக்கத்தைக்காட்டுகிறது. அப்பர், லோயர்

சகண்டரி பாடசாலைகளில் பெண்களோ வெகு சொற்பம். கல்வி விசாரணை யதிகாரியாகிய டைரக்டர், சென்ற வருடத்தில் பெண்கல்விப்பயிற்சி அதிகரிப்பதில்லை யென்றும், திருப்திகரமாகவில்லை என்றும் சொன்னது ஆச்சரியமல்ல. பெண்கள் பாடசாலைக்குப்போய் கற்காமலிருந்தபோதிலும், தங்கள் தங்கள் கிரகத்திலாவது கற்றுவருவார்களென்று நாம் நம்பக்கூடும்."

ஜஸ்டிஸ் ஷெப்பர்ட் துரையவர்கள், நம்மவர்கள்; மனதில் ஒரு அபிப்பிராயமும், வெளியில் வேறொரு அபிப்பிராயமும்கொண்டு நடந்துவருகிறார்களென்றுகூறியது அவர்கள் நம்மவர்களிடத்தில் அதிக பழக்கமில்லாமையால் அவ்வித அபிப்பிராயத்தை வெளியிட்டாரென்று நாம் அபிப்பிராயப்படுகிறோம். அப்பர் லோயர்சகண்டெரி பாடசாலைகளில் பெண்கள் வெகு சொற்பமாக படிக்கிறார்களென்று அபிப்பிராயப்படுகிறார். இது வாஸ்தவமே. நம்மவர்கள், புருஷர்கள் உபாத்தியாயர்களாகவிருக்கும் பாடசாலைகளுக்கும், மிஷன் பாடசாலைகளுக்கும் வயது சென்ற பெண்களை அனுப்ப அஞ்சுவதே இதற்கு காரணமாயிருக்கிறது. சிலர் பெண்களுக்கு தகுந்த புத்தகங்களில்லை யென்றுசொல்வது தப்பு. அவர்களுக்கு படிக்க வேண்டிய புத்தகங்களிருக்கின்றன. நமது பெண்களுக்கு உயர்தரப்படிப்பு சொல்லிக்கொடுக்க வேண்டுமானால் ஸ்திரீகளே உபாத்தியாயர்களாகவிருக்கும் தனிமையான உயர்தரப் பாடசாலை வேண்டியது அவசியமாயிருக்கிறது.

நமது தமிழ்நாட்டிலோ ஏழைப்பெண்களும், தாயாருக்கு உதவியாக வீட்டுவேலைசெய்துகொண்டு பள்ளிக்குச்சென்று கற்கப்பொழுதில்லாமலிருக்கிற சில பெண்களுந்தவிர சுமார் 80,000 பெண்கள் கல்வி கற்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் எழுதப்படிக்கத்தெரியும் வரைதான் கற்றுவருகிறார்கள். இவ்வித கல்வியினால் பெண்களுக்கு யாதொரு பிரயோசனமுமில்லை. அல்லாமலும் குறைப்படிப்பு எப்பொழுதும் கெடுதியையேவிளைவிக்கும். நமது பெண்களோ கல்வித்தேர்ச்சியால் புருஷர்களைப்போல பொருள் தேடப்போவதில்லை. ஆயினும் நற்குணநற்செய்கைகளை கற்பிக்க கல்வி முக்கிய சாதனமன்றோ? கல்வியறிவிருந்தாலொழிய, குணமுள்ள பெண்டிர்களாகவும், இல்லற நடத்துவதற்கு இசைந்த மனைவிகளாகவும், சிறந்த தாயார்களாகவும் நமது பெண்கள் எவ்விதம் ஆவார்கள்? ஆகையால் தாழ்ந்த பாடசாலைகளில் படித்து கல்விதேர்ச்சியடையாததினாலுண்டாகும் குறையை எவ்விதமாகிலும் நீக்குவதவசியம். இதற்கு வீட்டிலேயே பெண்கள் பற்பல நீதிகளடங்கிய புத்தகங்களைப்படித்துவரவேண்டியதவசியம்.

ஐயா! இதோ தெரிகிற சந்திரசைலத்தின் தென்பாரிசத்திலிருக்கிற கர்நாடக தேசத்தில் இருக்கிற இலட்சுமணபுரியில் வசிப்பவன். என் பெயர் கங்காதரன் என் தகப்பன் சீதாபதி ஐயர். அவர் மிகுதியும் ஏழையாயிருந்தபடியால் என் தமக்கை ருக்குமணி என்பவளை அவ்வூரிலிருந்த ஒரு விருத்தாப்பியனுக்கு விவாகம் புரிவித்து ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு அதை வியாபாரத்தில் உபயோகித்துத் திரண்ட பணம் சம்பாதித்தார். விருத்தனை மாப்பிள்ளை கையிலிருந்ததெல்லாம் ஆயிர ரூபாயும் ஒரு வீடும்தான். சிலகாலத்துக்குப் பிறகு அவன் இறந்துபோக என் தமக்கை ஒரு காசும் கையில் இல்லாமல் பாலவிதந்துவாய் என் தந்தையிடம் வந்து தன் குறைகளைச் சொல்லி முறையிட்டழுதாள். என் தந்தையும் தாயும் தாங்கள் செய்த குற்றத்தை நினைந்துவருந்தி அவளைச் சமாதானப்படுத்தி வீட்டிலேயே வைத்துக்கொண்டார்கள். வீட்டில் என்ன நன்மை நடந்தாலும் அவள் உட்கார்ந்து அழுவாள். அவளுக்குச் சமாதனங்கூறுவதே தொழிலாக இருந்தது. இந்தக் கஷ்டத்துக்காக அவளைக் கேளாமல் ஒரு காரியமுஞ் செய்வதில்லை, கொஞ்சகாலத்துக்குள் அவளே வீட்டுக்குத் தலைப்பிள்ளையானள். பல சொல்வதிற் பயனில்லை. என் குடும்பத்தில் அவளே சர்வசுதந்திரவதியானள். அவள் ஒரு சூத்திரக்கயிறும் என் தாய்தந்தையர்கள் அக்கயிற்ருல் ஆட்டப்படும் பொம்மைகளுமானர்கள். அவள் செய்யும் அந்நியாயமெல்லாம் நியாமாகும். அவள் செய்கைகள் எனக்குச் சம்மதமில்லாமையால் அடிக்கடி நான் அவளைக் கண்டிப்பதுண்டு. அது நிமித்தம் என்னிடம் க்ஷாத்திரம் பாராட்டிச் சிறிதுசிறிதாக என் சொத்துக்களைத் திருடி வெளிப்படுத்தி விட்டாள். இப்படியிருக்க என் தந்தை எனக்கு விவாகம் செய்விக்கத்தொடங்குகையில் இராட்சதியைப் போலப் பெருங்குரல்காட்டியழுது தன் சவரக்ஷணைக்கென்று பெருந்தொகையான பணத்தை வாங்கிக்கொண்டு அதை என் தந்தையிடமே வட்டிக்குக்கொடுத்து வீடுமுதலிய சொத்துக்களை யீடுகாட்டிப் பத்திரமெழுதிப் பெற்றுக்கொண்டாள். எனக்கு விவாகமான மறுமாதத்தில் தகப்பனிறந்து போனபடியால் நான் சொத்துக்களுக்குப் பாத்தியஸ்தனுகிக் கணக்குவழக்குகளைச் சோதிக்கும்பொழுது வீடுதவிர வேறு மிஞ்சவில்லை. மிகவருத்தத்தோடும் என் தாயையும்தமக்கையையும்பார்த்து இப்படி என்னுஸ்திமுழுமையும்கொள்ளையிட்டு என்னைப் பராதியாக்கிவிட்டீர்களே யென்று கடிந்துகூறினேன். அதுகேட்ட என் தமக்கை ஆங்காரங்கொண்டு பசாசுபோலக் கிளம்பி மூடா! நான்கொண்டுவந்த ஆஸ்தியையெல்லாமுனக்கும் உன்குடும்பத்துக்குங்கொட்டிக்கொடுத்துவிட்டுப் பரிதவித்துக் கொண்டிருக்கையில் என்னைத் திருடியென்று சொல்லுகிருயா! இன்னுஞ் சிலதினத்தில் பார்; உனக்குப் புத்திகற்பிக்கி

றேனென்று கூறி ஊரிலுள்ள சில போக்கிரிகளைச் சேர்த்துக்கொண்டு விவகாரந்தொடங்கிப் பாக்கியிருந்த வீட்டையும் பறித்துக்கொண்டு வாழ்ந்திருக்கிறாள். என் தாயும் அவள் பட்சமானாள். என் மனைவி சிறுபெண்ணாகையால் தாய் வீட்டிலிருக்கிறாள். ஆகையால் அவ்வூரிலிருக்க வெறுப்புக்கொண்டு, பொருள் சம்பாதிக்கவேண்டுமென்கிற விருப்பத்தால் என்னுடைய ஊரைவிட்டுப்புறப்பட்டு வந்துவிட்டேன். இவ்விடம் என்தலைவிதியை நொந்துவருந்தியழுதேன்; மற்றொன்றுமில்லை யென்றுகூறக்கேட்ட ஜகதீசன் தன்னுடைய பேரறிவால் அவனுடைய இருதயத்தைச் சோதித்துக், களங்கமற்ற நிர்மலசித்தமுடையவனென்றும், சத்திய நெறிதவறாத உத்தமபுருஷனென்றும் அறிந்து மனமகிழ்ச்சியோடுங் கூறுகிறான். உலகசுபாவமே ஒருவரை ஒருவர் வஞ்சித்துச் சீவிப்பதாகவே யிருக்கின்றது. வஞ்சிக்கப்பட்டதனாலே அறிவுடையோர் மனங்கலங்கமாட்டார்கள். செல்வப்பொருள் ஒரு மனிதனால் சம்பாதிக்கக்கூடியதே யன்றிச் சம்பாதிக்கக்கூடாத பொருளல்ல. அது மனிதனுடைய முயற்சியாலுண்டாகக் கூடியது. அது கொண்டே "முயற்சி திருவினையாக்கும்" என்றும் "தெய்வத்தானாகாதெனினுமுயற்சி தன், மெய்வருத்தக்கூலி தரும்" என்றும் பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். ஆதலால் பொருளை யிழந்தோமே யென்று வருந்தாமல் மேலும் மேலும் முயற்சி செய்தால் மஹா மண்டலேசுவரர்களும் மதிக்கத்தக்க பெரும்பொருளை யெளிதில் பெற்றுப் பேரின்பமுமுறலாம். ஆதலால் அறிவுள்ளவர்கள் பொருளை இழந்ததற்காக வருத்தப்படமாட்டார்கள். அதனாலேயே "கற்றார் முற்றோன்றாகழிவிரக்கம்" என்ற பழமொழியும் விளங்குகிறது. பொருளையிழந்த காலத்தும் மன உறுதியும், ஊக்கமும் உடையவராய் முயற்சிசெய்வார்க்கு எதுவும் அரியதன்று. இதனையே "கேட்டினுறுதிகூட்டுமுடைமை" "ஊக்கமுடைமை யாக்கத்திற்கழகு" என்ற மூதுரைகள் உபதேசிக்கின்றன. அன்றியும், "ஆக்கமிழந்தேமென்றல்லாவாருக்க மொருவந்தங் கைத்துடையார்" "ஆக்கமதர்வினாய்ச் செல்லுமசைவிலா, வூக்கமுடையானுழை" அறிவுடையார் செல்வத்தை யிழந்தாலும், பொருளை யிழந்தோமென்று வருத்தப்படமாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் தமது ஊக்கத்தையே செல்வமாகக் கொண்டிருப்பதனாலென்றும் கெடாத ஊக்கமுடையவனிடம் செல்வமானது தானே வழிதேடிக்கொண்டு வரும் என்றும் பிரமாணவாக்கியங்கள் நிரூபித்தலால் மனக்கலக்கத்தை ஒழித்துவிட்டு முயற்சித்தால் பொருளைப்பெறுதல் அரியதல்ல. ஒருதடவை இருதடவை செய்த முயற்சிகள் தவறிப்போனாலும் அதனாலே மனம்வருந்தாமல் மேலும் மேலும் முயற்சிப்பதே ஆண்மைக்கழகாகும். ஒருமுயற்சி செய்யத்தொடங்கின

மாத்திரத்திலே பொருள்கைகூடுவதானல் ஊக்கத்தால் பயனில்லையாம். அது பெண்களாலும் பெறப்படுவதாகும். இது பற்றியே, "இசையாதெனினுமியற்றியோராற்று, லசையாது நிற்பதாமாண்மை—இசையுங்காற்கண்டறிரையலைக்கும் கானலந்தண் சேர்ப்ப, பெண்டிரும் வாழாரோமற்று" என்ற நீதிவசனமும் எழுந்ததென்றறிக. ஆகையால் மனச்சஞ்சலத்து விட்டு என்னைப்பின்பற்றிவந்தால் நீர் எண்ணினதைவிட மேலான திரவியத்தைப் பெற்று வாழலாம். உமது கருத்தென்ன? என்று கேட்கக் கங்காதரன் ஐயா! உமது திருவத்தைப் பார்த்தபொழுதே யென் மனச்சஞ்சல மொழிந்து போயிற்று. உமது மதுவசனங்களைக் கேட்டவுடனே பேரின்பம் பெற்றவனானேன். இன்றுமுதல் நானுமக்குத் தொண்டன். என்னைப் பாதுகாப்பது உமது கடமையென்று வணக்கத்தோடும் கூறினன். அப்பொழுது ஜகதீசன் கங்காதரனைப்பார்த்து என் வரலாறு பின் சொல்லுகிறேன். இப்பொழுது அதைப்பற்றி யென்னைக் கேட்கவேண்டாம். வாருமென்றழைத்துக்கொண்டு போய் மலையின்மேலேறி அதன் வளமைகளைக்கண்டு மகிழ்ந்து களைப்பாறிப் பின், கீழிறங்கிவந்து ஆற்றுக்கும் அம்மலைக்கும் மத்தியில் விசாலமான இடமிருப்பதைக் கண்டு, ஐயா! இவ்விடத்தில் நாம் நமது வல்லமையைச்செலுத்துவோம். உமக்கு மங்களமுண்டாகுமென்று கூறக்கங்காதரன் ஐயனே! உமது சித்தம் போலாகட்டுமென்ற வுடனே ஜகதீசன் தன் எண்ணத்தை நிறைவேற்றத் தொடங்கினன்.

தேவதஞ்சரியம்மாள்.

சுகன்னியா.

பிருகு முனி என்ற ரிஷிக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அவனுக்கு சவுநகனென்று பெயரிட்டு அதிக விருப்பத்துடன் (பயிர்செய்வோன் பயிரைப்பாதுகாத்து வளர்ப்பதுபோல்) வளர்த்துவர வளர்ந்து வந்தான். இவன் தான் கல்விகற்கும் பருவம் அடைந்தபோது தந்தையால் நாலு வேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்துநான்கு கலைகள் முதலிய சாஸ்திரங்களை ஐயந்திரிபறப் போதிக்கப்பெற்று வெகு நிபுணனானன். பிறகு தான் தவஞ் செய்யவேண்டுமென்கிற எணணமுடையவனாய் தன் தந்தையிடம் வந்து பணிந்து ஐயா யான் தவஞ்செய்ய உத்தேசித்திருப்பதால் தாங்கள் அருள்செய்து உத்தரவளிக்கவேண்டுமென, அவர் மகிழ்ந்து, அப்பா? குழந்தாய்! நீ மகாபுத்திமான். சகலகலைகளையும் உணர்ந்தவன், தவஞ்செய்ய அருகன். ஆகையால் நீ அவ்விதமே ஒரு வனத்திற்குச் சென்று தவஞ்செய்யக்கடவாய், என்று விடையளித்து அனுப்பினர். தம் தந்தை

யிட்ட கட்டளைப்படியே சவுநகர் ஒரு வனத்திற்குச் சென்று தவத்திலிருந்தார். இவர் நெடுங்காலந் தவத்திலிருந்தமையால் இவரைப்புற்று மூடிக்கொண்டது. இதுநிற்க, சிலநாள்சென்ற பின்பு இரவிகுல திலகனுகிய சர்யாதி மகாராஜாவானவர் வேட்டையாட வனத்திற்குப் புறப்படவேண்டுமென்று மந்திரியிடத்தில் தமது பரிவாரங்களை ஆயத்தப்படுத்தும்படி சேனாதிபதிக்கு உத்தர வளிக்கக் கட்டளையிட்டார். உடனே சேனைத்தலைவன் சேனைகளை ஆயத்தப்படுத்தி அரசனுடன் செல்லத் தயாராயிருந்தான். இராஜன் தமது அருமையான புத்திரியாகிய் சுகன்னியையும் உடன் அழைத்துக்கொண்டு மந்திரியுடன் புறப்பட்டு ஒரு வனத்தில் தங்கி வேட்டையாட ஆரம்பித்து அநேக விலங்கினங்களைக் கொன்று வெகுநேரம் வேட்டையாடினதால் களைப்புற்று ஓங்கித்தழைந்தசோலைகள் சூழ்ந்த மேற்கண்டவாறு சவுநகமுனிவர் தவஞ்செய்யும்வனத்தில இளைப்பாற வந்து தண்டிறங்கி யிருந்தார். அச்சமயத்தில் அவ்வரசன் குமாரத்தியாகிய சுகன்னி சில தாதிமார்களுடனே அவ்வனத்திலுள்ள விநோதமான விருக்ஷங்களையும், நீரோடைகளையும், புஷ்பத்தோட்டங்களையும், மயில், மான் முதலியவை தங்கியிருக்குமிடங்களையும், இன்னும் அநேகவித விநோதங்களையும் கண்டுகளிக்கச் சென்றாள். அவ்விதம் அப்பெண் செல்லும்போது மார்க்கத்தில் சவுநகமுனிவரை மூடியிருக்கும்படியான புற்று தென்பட்டது. அதைச்சுகன்னியானவள் உற்றுப்பார்த்து, என்ன ஆச்சரியம்! இதில் இரண்டு ஒளி உண்டாயிருக்கின்றன, என்ன பிரகாசமாய் ஜொலிக்கின்றன! ஆ! ஆ!! என்ன விநோதக் காட்சி, யென்று சொல்லிக்கொண்டு அவ்வொளி முனிவரின் கண்களின் ஒளியென்பதை அறியாதவளாய் ஒரு குச்சியெடுத்து வேடிக்கையாக அவ்வொளி வழியாகக் குத்தினாள். அப்படிக் குத்தவே அக்குத்து முனிவரின் கண்ணிற்பட்டு கொஞ்சம் உதிரம் வெளிவந்தது. இதைக்கண்ட அப்பெண் பயந்து ஓடிவந்துவிட்டாள். முனிவர் கோபங்கொண்டு, முனிவர்கள் இருக்குமிடத்திற்கு ஒருவரும் வரக்கூடாது; வந்தாலும் இவ்வித துஷ்டத்தனம் செய்வது மகா பிசகு என்று எண்ணி, அதிக உக்கிரத்துடன் இராஜன் அவன் மந்திரி இருவர்தவிர மற்றவர்களுக்கெல்லாம் கண்ணொளி மழுங்கக்கடவதென்று சாபமிட்டார். உடனே அவ்வரசன் சேனைகளனைத்தும் குருடர்களாகி ஐயோ இதென்ன ஆச்சரியம் என்று வழிதெரியாமல் யாவரும் எங்களுக்குக் கண்பார்வை போய்விட்டதே யென்றுகூச்சலிட்டார்கள். அரசன் இக்கூச்சலைக்கேட்டுப் பயந்து என்ன விபரீதம்நமது சேனைகளுக்கு உண்டாயிற்றென்று திகிலடைந்து உடனே மந்திரியுடன் அவர்களிருக்குமிடத்திற்குச் சென்று அவர்களை "நீங்களனைவரும் பயங்கரமான சப்தம் செய்ததின் காரணமென்ன? எனக்குச் சொல்லுங்

கள்" என்று கேட்டான். அதற்கு அவர்கள் ஐயா திடீரென்று எங்கள் நேத்திரப்பார்வை போய்விட்டது, என்றார்கள். அரசன் அதைக்கேட்டு மிகவருந்தி, மந்திரீ ! இதென்ன விந்தை, நமது சேனைகள் கண்ணொளிமழுங்கி வருத்தப்படுகின்றன. இதற்குக் காரணமென்ன ? திடீரென்று இவ்விதம் நேரிட யாதுகுற்றமுண்டு ? நாம் இருக்குமிடம் தபசிகள் இருக்குமிடமோ? அல்லது வனதேவதைகளிருக்கு மிடமோ ? அவர்களுக்கு நமது சேனைகளால் ஏதாவது தீங்கு நேரிட்டதோ ? அல்லது நாம் வேட்டையாடினமிருகங்கள் ரிஷிகளுடையவோ ? அதனால் அவர்கள் கோபங்கொண்டு இவ்விதம் செய்தார்களோ ? ஐயோ, இதென்ன பாவம் ! நான் இவ்வித கெட்டபெயரை யடையவோ இவ்விடம் வந்தேன்" என்று புலம்பிக்கொண்டிருக்கையில் புத்தி சாதுரியமுள்ள மந்திரி சற்றுநேரம் தீர்க்காலோசனை செய்து நீதிதவறாமல் அரசுசெலுத்தியும், தருமங்களைச் சரிவர நடத்தியும் வரும் வேந்தே ! இந்த வனம் மகா தவசிரேஷ்டர்களாகிய ரிஷிகளுடையதா யிருக்கவேண்டும். அவர்களில் எவருக்காவது நமது சேனைகளால் ஏதோ ஒரு குற்றம் நேரிட்டிருக்கவேண்டும், அதனாலேதான் இத்துன்பம் வந்திருக்கிறது. இது ரிஷிகளுடைய சாபமாகத்தானிருக்கவேண்டுமே தவிர வேறன்று. ஆகையால் சேனைகளைத்தீர விசாரிப்போமென, இராஜன் மிக்ககோபத்துடன் தனதுதளத்தை நோக்கி "உங்களில் யாராவது இவ்வனத்தில் வாசஞ்செய்யும் ரிஷிகளில் யாருக்காவது துஷ்டத்தனஞ் செய்திருந்தால் பயப்படாமல் சீக்கிரம் தெரியப்படுத்துங்கள்; அப்படி தெரியப்படுத்தினால் யான் அந்த ரிஷிகளைக்கண்டு இச்சாபம் நீங்கும்படியாய் வேண்டுகிறேன்" என்று சொல்லி, மற்றவர்களுக்கும் தெரியும்படி பறைசாற்றுவித்தான்.

அவர்கள் குற்றஞ் செய்திருந்தாலல்லவோ உண்மையைத் தெரியப்படுத்த முன்வருவார்கள்? ஒருவரும் குற்றஞ்செய்யாதபடியினாலே குற்றஞ் செய்தேனென்று முன்வந்து சொல்பவனைக்காணோம்.

அரசன் இதைக்குறித்து மிகவும் வருந்திக்கொண்டிருக்கையில் சுகன்னியானவள் அப்பறையோசையைக் கேட்டு தன் பிதாவினிடத்திற்கு வந்து வணங்கி "அப்பா! நான் என் தோழிகளுடனும், தாதிமார்களுடனும் இவ்வனத்திலுள்ள விநோதங்களைக் காணும் படிச்சென்றேன். அப்படிச் செல்லுகையில் ஒரு புற்று தென்பட்டது. அதில் இரண்டு கண்ணொளிகள் மிகவும் பிரகாசமாக ஜொலித்துக்கொண்டிருந்தன? அதை நான் ஓர்குச்சியால் குத்தினேன். உடனே அதிலிருந்து கொஞ்சம் இரத்தம் வந்தது. அதைக்கண்டு

மிகப்பயந்து நான் என் இருப்பிடத்திற்கு வந்துவிட்டேன். இது என் மூடத்தனத்தால் நேர்ந்தது, மன்னிக்கவேண்டுகிறேன்'' என்றாள்.

அரசன் கேட்டு அதிக திகிலடைந்து ஐயோ! நமக்கு இவ்வித துன்பம் நேரிட்டது பூர்வகன்மபலனென்று எண்ணித் துக்கித்து அப்புற்றைத் தனக்குக் காட்டும்படி கேட்டான். சுகன்னியானவள் அரசனையும் மந்திரியையும் அழைத்துக்கொண்டுபோய் அப்புற்று இருக்குமிடத்தைக் காட்டக்கண்டு அப்புற்றைச் சோதித்துப் பார்த்தபோது அதில் தவசிரேஷ்டரான சவுநகமுனிவரிருக்கக் கண்டு அம்முனிவரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து மிக்க பயபக்தியுடனே வணங்கி பலவிதமாய்த் தோத்திரஞ்செய்து என் புத்திரி அறிவின்மையால் செய்த தப்பிதத்தைப் பொறுத்து எனது சேனைகளுக்கு கண்ணொளியைத் தந்து இரட்சிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான்.

அம்முனிவர் இவ்வரசனுடைய பயபக்தி விசுவாசத்திற்குமிக மகிழ்ந்து தான் முன்னிட்ட சாபத்தை நீக்கி அவ்வரசனுக்குப் பல ஆசீர்வாதஞ் செய்தார். அவர் அவ்விதம் செய்யவே நீதிமன்னன் மிக சந்தோஷப்பட்டு, ஓ முனிசிரேஷ்டரே! இந்தச் சுகன்னி என் அருமைப்புத்திரி. இவள் செய்த குற்றத்தை மன்னித்ததற்காக இப்பெண்ணை உமக்கு விவாகம் செய்து கொடுக்க விருப்புற்றிருக்கிறேன்; தாங்கள் என்னிஷ்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டான்.

பத்திராதிபர்.

மகாராணியவர்களின் ஞாபகச்சின்னம்,

சகோதரிகளே!

பல்லாண்டுகளாய் நம்மையெல்லாம் பாதுகாத்தளித்த சக்கிரவர்த்தினியவர்கள் இப்புதுவருஷத்தின்றுவக்கத்தில், ஆண்பிரஜைகளுக்குப் பொதுத் துக்கத்தினையும், பெண்பிரஜைகளாகிய நமக்குச் சிறப்புத் துக்கத்தினையும் தந்து விண்ணுலகமாளுகை செய்ய விரும்பியேகிய விஷயம் நீங்களனைவருமறிந்திருப்பீர்களே. அவ்விஷயமாக நமக்குள்ள துயரம் இன்ன தன்மையதெனவாவது இன்ன அளவினதெனவாவது பிறர் உணரும்படித் தெரிவித்தல் சாத்தியமன்று. ஆயினும் பேதும்பைப் பருவத்திற்பெற்றதாயையிழக்க நேர்ந்த பேதைப் பெண்களினிலைமையை நாமடைந்தோமென வொருவாறுபொருந்துமென்னலாம். இத்தகைய பரிதாபநிலையிலிருக்கும் நம்மைக்கவலையோடு காத்துத் துயராற்றி நன்னிலையிற் செல்லக் கைகொடுத்துதவக்கூடியதற்குற்றதுணையாவார் மகாராணியாராகிய மாதாவின் ஆளுகைக்குட்பட்ட ஆண்பிரஜைகளாகிய நமது சோதரர்களே யாம். இடையில்

நம்மை யஞ்ஞானமென்னும் அருஞ்சிறையிலிட்டு அடிமைகளாக்கிய மகம்மதியராளுகையை மாய்த்து நமக்கும் தற்சுதந்திரமுண்டென்பதையும், நமக்கும் கல்விகற்கும் ஆற்றல் உண்டென்பதையும் நமக்கும் கற்றால் அறிவுவிருத்தியாகுமென்பதையும், நமது மூதாட்டிகளும் நமது பிதுர்பிராதாக்களும் ஒருவாறுணர்ந்து தலை துளக்குமாறு செங்கோல் செலுத்திய மகாராணியாரின் புகழையும் வாழ்க்கைச் சிறப்பினையும், உயர்குணங்களையும், ஆட்சிவல்லமையையும் பகையரசரும் பாடித்துதிக்க விரும்புவராதலின் அவராளுகையில் அநேகாயிரமாண்டுகளாய் நம்மை விட்டகன்றிருந்த கல்விச்செல்வத்தினையடைந்த நாம் அவரது மரணத்தைப்பற்றித் துக்கிப்பதுடனில்லாது அவரது ஞாபகார்த்தமாய்ச் செய்யக்கூடிய விஷயம் இன்னதென்பதைப் பற்றியும் ஆலோசித்துத் தெரிந்துகொள்ள வேண்டியது நமது கடமையும் நமக்குள்ள நன்றியுணர்ச்சியின் அடையாளமுமாகும்.

ஒவ்வொரு மகாணங்களிலும் மகாராணியாரின் ஞாபகச்சின்ன விஷயமாக வெவ்வேறு விதமான ஆலோசனைகளும் ஏற்பாடுகளும் நடந்துவருகிற விஷயம் சுதேசமித்திரன்முதலிய முக்கிய தமிழ்ப்பத்திரிகைகளும், ஆங்கிலப்பத்திரிகைகளும் அப்போதைக்கப்போது வெளியிடுகின்றன. அவைகளில் சிலது உல்லாசத்திற்குரியதாயும் சிலது தேசத்திற்குடிகொண்டிருக்கும் வறுமையைப் போக்கக்கூடியதும் சிலது சேரும் பொருளுக்கு தக்க சிலவுக்குமட்டில் காரணமானதும், சிலது கனவான்களின் கருத்தினையனுசரித்ததும், சிலது இன்னது செய்வதெனும் முடிவு தெரியாததுமாகப் பலவாறு காணப்படுகிறது. இவ்வளவிலும்இறந்துபோன அரசியார் பெண்பாலாதலின் அவ்வினத்தினராகிய பெண்பாலார்க்கு நீண்டகாலத்திற்கு நன்மை விளைவிக்கக்கூடியதாக ஒன்றைச்செய்தலே அம்மகாராணியாரின் பெண்மையில் தாங்கள் வைத்திருந்த தாயன்பிற்குப் அவர்களால் தாமடைந்த நடுவுநிலைமையான நீதிக்கும் உதாரணமாகுமென்பதை எந்த மேதாவிகளும் ஆலோசியாதிருப்பது அதிசயிக்கத்தக்கதேயன்றோ? அன்னையையிழந்த அவசரத்திலேயே இவ்விதம் பெண்கல்வியில் ஊக்கமுடைய நமதருமைச் சோதரர்கள் நம்மை அசட்டை செய்வார்களாயின் இனிமற்றைக்காலமும் நாம் தலையெடுப்பதெப்படி? விக்டோரியா அம்மையார் ஏனைய பெண் பாலாரைப்போல ஆண்பிரஜைகள் பால் அன்பு குறைவாகவும், பெண் பிரஜைகள் பால் அன்பதிகமாகவும் வைத்துப்பாரபட்சமாய் நடந்துவந்தனரா? இரண்டு கண்களை இருபாலாருமெனவன்றோ எண்ணியரசு புரிந்தனர்; பாரபட்சமாகப் பெண் பாலார்க்குப் புதிய சுதந்தரங்களைத் தரக்கூடிய சட்டதிட்டங்களை யேதேனு மேற்படுத்தி ஆண்பிரஜைகளை அலட்சியப் படுத்தியிருந்ததுண்டெனின் அவர் காலஞ்சென்றதும்

நம்மை நமது சோதரர்கள் கைவிடலாகும். நம்மீது வன்மஞ்செலுத்தலாகும். அவ்வாறொன்றுமில்லையாதலின் நம்மையவர்கள் அசட்டைசெய்யுவாவது நம்மீது வன்மஞ் செலுத்தவாவது எள்ளவும் காரணமில்லை. நம்மைச் சிறிது மறந்திருக்கின்றதாகவே தோன்றுகிறது. நாம் அவர்களுக்கு நினைப்பூட்டி நமது கோரிக்கையைத் தெரிவித்துக் கொள்ளுவோமாயின் நமது பிரேரேபணையை யொருக்காலு மாதரிக்காது போகார். ஆதலின் நாம் தாயற்றபோதே சீரற்றோமெனத் தயங்கிநிற்காமல் நமக்கு வேண்டிய நன்மைகளை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு நமது சகோதரர்கள் பால்முறையிட முன்வரவேண்டும். இதுவே தருணம். சேர்தரிகளே! தாயிழந்த தாங்கொணாத்துயரத்தை யொருபாலடக்கிக்கொண்டு தாழ்க்காமல் வெளியேறுங்கள்.

பம்பாய் முதலிய வெளியிடங்களில் இவ்விஷயமாக ஆலோசிக்க நமது சோதரிகளிற் சிலர் முன்வந்திருப்பதாகத் தெரிவதால் நாமும் நமது கருத்தைக் கலந்து வெளியிடத் துணிகின்றோம்.

மைசூர் மகாராணியார் தமதாளுகையின் சொற்பக்காலத்திலேயே தமது ஞாபகம் பிற்காலத் தழியாதிருக்கும்படித் தக்க முன்யோசனையுடன் பெண்கட்காக உயர்தரக்கலாசாலை யொன்றை நியமனஞ்செய்து சுக்கில பட்சசந்திரன் போல் விருத்திசெய்து விட்டனர். நமது மகாராணியாரோ அகண்டமான தேசங்களைக் கட்டியாண்டு நிர்வகித்தற்கருமையான பொறுப்பினைமேற் கொண்டிருந்தவராதலின் அவ்வித சாதகங்களொன்றையும் பலகாலத்தாட்சியிலும் ஏற்படுத்த வியலாதவராயினர்; அன்றியும், ஆடவர் பெண்டிரென்றும் வேற்றுமையின்றி ஒரே கலாசாலையில் கல்விகற்கும் சுபாவம் ஆங்கிலேயரிடத்திலமைந்ததாதலின், நமது தேசாசாரத்திற்கும், ஒழுக்கங்கட்கும், மனப்போக்குகட்கும், ஒத்தமாதிரியாகத் தனிமையில் நமக்காக உயர்தரக்கலாசாலை நியமிக்கவேண்டியது அவசியமென்பதும், மைசூர் மகாராணியவர்கள் மனத்திற் பதிந்ததுபோல் இங்கிலாண்ட் மகாராணியவர்கள் மனத்திற் பதிய ஏதுவில்லாமற் போனது. அவ்வளவேயன்றி நாம் உயர்தரக் கல்வியை யடையக்கூடாதென்பதாவது நமது கனதனவான்கள் இவ்விஷயங்களில் முயற்சிசெய்து சீர்திருத்தக்கூடாதெனும் பொறாமையாவது அவர்கள் கருத்தன்று. ஆதலின் இத்தகைய நற்றருணத்திலாவது நமது சென்னை மாகாணத்திற்கு உயர்தரத்தனிக்கலாசாலையில்லாத பெருங்குறையகலுமாறு நமது சுதேச கனதன்வான்கள் முன்வந்து விக்டோரியா சக்கிரவர்த்தினியவர்கள் பெயரால் சென்னையின்கண் நமக்காக ஓர் உயர்தரக்கலாசாலையை ஞாபகார்த்தமாக நியமனம் செய்யவேண்டுமென்பதே யெமது முக்கிய கோரிக்கையாம். இவ்விஷயத்தைப்

பற்றி நீங்கள் அனைவரும் ஒரேமனதாய்ப் பத்திரிகைகள் மூலமாயும் இம் மாதர்மனோரஞ்சனி வாயிலாகவும் வெளியிடவேண்டிய தின்றியமையாக் கடமையாகும். இவ்வித கலாசாலையினால் நாமினிப்பயன் பெறுவிடினும் நமது இளைய சகோதரிகளும் நமது அருமைப் புதல்விகளுமாவது பயன் பெறத்தடையில்லை, நமது சோதரர்களும், நமது செல்வப்புதல்வர்களும்,

ஈருரிப்பேன் பார்த்திருந்தங்கிதம்பேசி
விருந்தென்று கணவன் விளம்பத்—திருந்திழையாள்
பாடினாள் பேய்ப்பாட்டைப்பாரல சளகெடுத்துச்
சாடினாளோ டோடத்தான்.

என்பதுபோல் அம்பலத்திற்குக் கொண்டுவரும் அடங்காமனைவிகளை யடைந்து சந்நியாசத்திற்குச் சபலப்படாது அறிவுள்ள அந்தரங்க மனைவியாரை யடைந்து அந்நியோன்னிய தாம்பத்தியமெனும் அருஞ்செல்வத் திடகாத்திரமுள்ள சுகசரீரிகளாய்ச் சுந்தரமக்களையீன்று இல்லறப்பயனை யடைந்து இன்புறுவர்; ஆதலின் இருபாலாரும் இப்பிரேரேபனையைக் கவனித்து முடிவுக்கு வருமாறு ஆதரிக்கக் கோருகிறேன். இரண்டாவது:—

மகாராணியாரின் ஜனனமாதியாக மரணமீறுகவுள்ள முழுச்சரித்திரத் தினையும், மைசூர் கலாசாலையினுயர்தரக் கல்வி கற்றுத்தேறிய பெண்மணிகளில் யாராவது அல்லது இருபாஷையிலும் வல்ல வேறு எந்த மாகாணத்துப்பெண்களாவது நமது செந்தமிழ்ப் பாஷையில் மொழிபெயர்க்க முன்வரல்வேண்டும். அவ்வாறு மொழிபெயர்க்க எவரும் முன் வராவிடில் ஆண் சகோதரர்களெவரேனும் அதனை நிறைவேற்றக்கூடும். எனினும் நம்மினத்தவர்களால் அக்காரியம் நிறைவேறுவதானால் நமக்குப் புகழன்றி ஆண் சகோதரர்களால் நிறைவேறுவது நமக்குப் புகழை விளைவிக்காது.

அவ்வாறு எளிய நடையில் மொழிபெயர்க்கப்படும் தமிழ் வசன நடையானது சிறந்த நமது நாட்டிற்கினிமை தரத்தக்க கற்பனாலங்காரங்கள் கனிந்த செய்யுட்காப்பியமாகப் பின்பு நம்மினத்தாரலேயே இயற்றுவிக்கப்படவேண்டும். அதற்குத்தக்க கவித்திறமை வாய்ந்த பெண்களும் தற்காலமிருப்பதால் யாம் இவ்விதம் கூறத்துணிவுற்றனம். இவ்விதமன்றிப் பெண்கள் பேரைவைத்து ஆடவர்கள் இப்படிப்பட்ட காரியங்களை நிறைவேற்றுவதை. நாம் அங்கிகரிக்கக்கூடாது. வேண்டுமாயின் அதற்குரிய பெண்கள் உண்மையில் ஆற்றலுடையவர்களா, என்பதை பொது ஜனங்களில் தலைமையானவர்கள் யாராவது பரீட்சித்துமறிய முன்வரலாம்.

இவ்வித அரிய காரியத்தினை நிறைவேற்றுவதற்குத் தகுதியுள்ள பெண்கள் யாவரென்பதை பத்திரிகை வாயில்களாகத் தெரிந்து, அப்பெண்

களுக்கு அவ்வாறியற்றுவதற்கு ஊக்கமுண்டாகும் பொருட்டுப் பின்னர் அந்நூல் உயர்தரக் கலாசாலையாரால் அங்கீகரிக்கப்பட்டு விர்த்திக்குவரும் நிலைமைக்குக்கொண்டு வருதலென்னும் முன் யோசனையுடனும் ஒற்றுணர்ச்சியுடனும் அன்னாரைத்தூண்டுதல் செய்து, அன்னார் இயற்றியளிக்கும் நூலினை நமது சென்னையின்கணுள்ள இராஜா ஸர் இராமசுவாமி முதலியாரவர்களைப்போன்ற கனதனவான்கள் அச்சியற்றுவித்து உபகரிக்கவேண்டியது. இவ்வாறின்றி அல்லியரசாணிமாலைபோல விக்டோரியா சக்கிரவர்த்தினியாரின் சரித்திரத்தையும் இயற்றுவித்தல் வேண்டுமென 20 தினங்கட்கு முன் சுதேசமித்திரனில் வாலாஜாநகரிலிருந்து ஒரு நிருபர் எழுதியிருந்ததுபோற் செய்வது அவ்விராணியாரது புகழிற்கு மிக்க குறைவாகுமென்பது திண்ணம். சோதரசோதரிகளே தங்களெல்லாருடைய தீர்மானங்களையுமெதிர்பார்த்து இதை யிம்மட்டோடு நிறுத்துகின்றேன். வந்தனம்.

அசலாம்பிகையம்மாள்.

விடுகதை.

(1) அறைக்கிற ஆலைதனில் அடைந்துகிடக்குதொருபாம்பு, அது அசைந்து புரண்டு உழன்றாலும் அகப்படுவது சற்றேனுமில்லை.

(2) ஆயிரம்பேர் கட்டிய அரங்கமணிமண்டபம் ஒருவன் கண்பட்டால் ஒழியும் அந்த மண்டபம்.

(3) சக்கரம்போல் வடிவுண்டு தாமரையுமல்ல, தனியொளித் தானுண்டு சந்திரனுமல்ல, பக்கமெலா மரும்பிருக்கும் கண்ணுமல்ல, பாதியதில் பிரதிமையுண்டு படமுமல்ல, துக்கமதிகரிக்குமது வில்லாவிட்டால், துணைவர்களே யிதன் பெருமையுரைக்கொண்ணாது, யெக்குறையுந் தீர்ந்துவிடு மதுவுண்டானால், இக்கதையை யின்னதென்று யியம்புவீரே.

வே. லக்ஷ்மீ அம்மாள்.

முக்கிய அறிவிப்பு.

நமது பத்திரிகைக்கு சென்ற வருடத்திற்கும் இவ்வருடத்திற்கும் சந்தா கொடுக்காதவர்களுக்கு அடுத்த சஞ்சிகை வி. பி. மூலமாக அனுப்பப்படும். தயவுசெய்து பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு பணத்தை அனுப்புவார்களானால் பத்திரிகை காலம் தவறாமல் வெளிவர அனுகூலமாயிருக்கும். சென்ற மாதப் பத்திரிகையையும் சில கனவான்களுக்கு வி. பி. மூலமாய் அனுப்பியதில் சிலர் சந்தாவை யனுப்பியதைப்பற்றி மிகவும் சந்தோஷப்படுவதுடன், சிலர் வி, பி, யை திருப்பிவிட்டதைப்பற்றி மிகவும் விசனிக்கின்றோம். ப.ர்.